15-03-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

## தலைப்பு : இணையத்தில் பணமோசடி செய்யும் தளங்களும் அவை தொழிற்படும் விதமும்

தொடக்கவுரையாடல் : தி. அனோஜன்

பண மோசடி பல வழிகளில் நடந்து வருகிறது. நேரடியான குற்றச்செயல்களாக, மக்களால் இவை குற்றச்செயல்கள்தாம் என இலகுவில் அடையாளம் காணக்கூடியதாக நடப்பது ஒருவகை. சட்டபூர்வமானவை போலவும் மோசடித்தன்மை அற்றவை போலவும் தோற்றம் காட்டிக்கொண்டு பண மோசடியில் ஈடுபடுவது இன்னொரு வகை.

இந்த இரண்டாவது வகைப்பாட்டினுள் அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கள், மோசடியான வங்கி, சீட்டு நிறுவனங்கள், பிரமிட் வகை முதலீடுகள் போன்றவை அடங்கும். இணையத்தின் வருகையோடு எல்லாமே இணையத்தினுள் காலடி எடுத்து வைத்ததுபோல இந்த பண மோசடியும் இணையத்தினைத் தளமாகக்கொண்டு இயங்கத்தொடங்கியது.

இணையத்தளங்களில் பல நுணுக்கமான வழிகளில் இந்தப் பண மோசடிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இணையத்தினூடான பணப் பரிமாற்றம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்தே இந்த மோசடிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆரம்பத்தில் பெரிய நிறுவனங்களால் பெரிய முதலீட்டுடன் மட்டுமே நடந்துவந்த இந்த வகையான மோசடிகள் இப்போது தனி நபர்களால் சிறு முதலீடு மற்றும் சிறிது நேரத்தை செலவழிப்பதன் மூலம் செய்யப்படுகின்றது. இதனால் இப்போது இந்த மோசடிகள் மிகப் பரந்த அளவில் நடந்து கொண்டுள்ளது.

இப்படியான தளங்களில் பல வகை உள்ளன.

### பணப் பரிமாற்றம் செய்ய உதவும் சிலதளங்கள். ( Payment Processors )

இதில் முக்கியமானது. முடக்கியுள்ள பயனர் கணக்குகளுக்கு அளவில்லை. தகுந்த காரணங்கள் இல்லாமலே கணக்குகள் முடக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு : Paypal

### பண முதலீடுகளுக்கு வட்டி வழங்கும் தளங்கள்.(HYIP)

இவை முதலீடுகளுக்கு அதிகவட்டி வழங்குவதாக வாக்களித்து பெருமளவு பணத்தை திரட்டி ஏமாற்றும் செய்யக்கூடியன.

எடுத்துக்காட்டு : Geniusfund, Fxprofit, topearnings, பிரமிட் ப்ளான்ஸ் (Multi Level Marketing)

இந்த வகையான தளங்களில் தளத்தின் உரிமையாளரும் ஆரம்பத்தில் சேர்கின்ற சில முதலீட்டாளர்களும் மட்டும் பெரும் தொகை சம்பாதிக்க மிகப் பெரும் தொகையான முதலீட்டாளர்கள் ஏமாற்றப்படுவர்.

எடுத்துக்காட்டாக Goldeninvesters , earnwithus போன்றவற்றைக் கூறலாம்.

### விளம்பரங்களை பார்வையிடுவதற்கு பணம் வழங்கும் தளங்கள்.( pay to click )

இது போன்ற தளங்களில் ஒருவர் முதலிடும் தொகையின் ஐந்தில் நான்கை மட்டுமே திரும்பப் பெறக்கூடிய வகையில் இதன் திட்டம் வடிவமைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு : Incrasebux, TuiBux, Buxzika

### இருவேறு வகையான இணைய பணப்பரிமாற்றம் செய்யும் தளங்களிடையே பணத்தை மாற்றும் வேலையை செய்யும் தளங்கள். ( Money EXchangers.)

இவை பலவேளைகளில் தாம் செய்வதாகக் கூறியபணப்பரிமாற்ற வேலையை செய்யாமல் அப்பணத்தை மோசடிசெய்வதுடன் சில சமயம் மிகஅதிக சேவைக்கட்டணமும் விதிக்கின்றன. சில தளங்கள் சதவீதம் வரையும் அறவிடுகின்றன.

எடுத்துக்காட்டு : Gothroughus


மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**இணையத்தில் தமிழ் ஆய்வேடுகளும் தமிழ் நூல் விற்பனையும்**
விருபா து. குமரேசன் | 22-03-2012

**அரபு நாடுகளில் நடக்கும் எழுச்சிகளின் பின்னணிகள்**
A. M. M. நிசாடீன் | 29-03-2012

**தற்காலக் கவிதைகளில் படிமங்களும் குறியீடுகளும்**
சி. சிவசேகரம் | 05-04-2012




உலக நீர் நாள் 2012

உலக நீர் நாள் (World Day for Water அல்லது World Water Day), ஐக்கிய நாடுகள் அவையின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு தோறும் மார்ச் 22 ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

2012 ம் ஆண்டு " நாம் பசியோடிருப்பதால் உலகம் தாகத்தோடு இருக்கிறது" என்ற கருப்பொருள் கொண்டதாக நீர் நாள் அமைகிறது. உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் நீரின் அளவு குறித்த அகரிசனையை இந்தக் கருப்பொருள் விளக்குகிறது.

நீர் நாள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு : unwater.org/worldwaterday/

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இணையத்தில் பணமோசடி செய்யும் தளங்களும் அவை தொழிற்படும் விதமும்

முன்பக்கத் தொடர்ச்சி...

இவற்றின் மூலம் மோசடி செய்யநினைப்பவர்கள் ஒருமாதத்தில் குறைந்தபட்சம் $3000 வரை மோசடி செய்யமுடிகிறது.
இவற்றின் செயற்பாட்டை கண்காணித்து நல்ல தளங்களை பட்டியலிடும் பணியை செய்வதை சில தளங்களுமுண்டு ( Monitoring Sites). இவற்றில் பட்டியலிடப்படும் தளங்கள் அதிக பயனர்களைப் பெறும் என்பதால் இந்தத் தளங்களும் இப்போது பிழையான தகவல்களை பணத்திற்காக வழங்குகின்றன.இதன்மூலம் மோசடித்தளங்கள் தங்களுக்கான பயனர்களைப் பெறத்தொடங்கியுள்ளன.

இது தவிரவும் இணையத்தில் பணமீட்டுவதற்கு வழிசொல்வதாய் சொல்லும் தளங்களும் இவற்றை பற்றி கலந்து பேசும் இணைய மன்றங்களும் இந்த மோசடித்தளங்கள் பற்றி எதையும் சொல்லாமல் அத்தளங்களின் வெறும் பதாதைகளையே விளம்பரம் செய்து சிறிது லாபம் சம்பாதித்து வருகின்றன.

இந்த மோசடிக் கும்பலிடையே சில வேளைகளில் பரஸ்பர ஒத்துழைக்கும் தன்மை காணப்படும்.அதாவது ஒருவனது வளர்ச்சிக்கு மற்றவர் உதவுதல்.தங்கள் தளங்களில் மற்றவரைப் பற்றி இலவச விளம்பரங்கள் இடுதல்.

முதலீட்டாளர்கள் தொடர்பாட உருவாக்கப்பட்ட சில இணைய மன்றங்களில் உள்ள விளம்பரம் செய்யும் சந்தர்ப்பத்தையும் இவை பயன்படுத்திக் கொள்கின்றன.

இவ்வாறான மோசடிகள் இணையத்திலும் சாதாரண வணிகத்திலும் ஏன் நடைபெறுகின்றன ஏற கேள்வி எழுப்பப்பட "பணம் விற்பனைப் பண்டமாக மாற்றப்பட்டதுதான் இந்த நிலைக்கு காரணம் " என சபையினர் தரப்பில் பதில்வந்தது.

இன்று இணையத்தில் உலாவும் கற்பனை பணத்தின் ( Virtual money ) மூலம் நிஜமான பணம் ( Real Money ) மோசடிக்குள்ளவது என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

## இணையத்தில் தமிழ் ஆய்வேடுகளும் தமிழ் நூல் விற்பனையும்

இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.

1. இணையத்தில் தமிழ் நூற்பட்டியல்கள், நூல்விபரங்கள் திரட்டப்படவேண்டிய தேவை.

2. விருபா தளம் பற்றிய அறிமுகம்.

3. இணையத்தில் தமிழ் நூல்களை விற்பனை செய்வதற்கு தற்போதுள்ள சேவைகள்.

4. இலங்கை நூல்களை இணையத்தில் விற்பனை செய்வதற்கான வாய்ப்புக்கள்.

5. தமிழில் இணையத்தில் ஆய்வுக்கான வளங்கள் எவ்வாறுள்ளன, ஆய்வேடுகள் எவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றிய பார்வை.

6. தமிழில் இணையத்தில் ஆய்வேடுகளை ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகள்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

CC BY NC SA






பாடசாலை நாட்கள்இரட்டைச் சடைகள் பறக்க
நான் மலைகளின்மேல் ஷாரினா, நெலியா, லட்சுமியுடன் மிதந்தேன்
பள்ளியின் பின்னால் நீளும் இந்நெடும்பாதை
எப்போதும் விரைவில் முடிந்துவிடுகின்றது

ஷாரினா இவ்வுலகில் எதற்கும் கவலைப்பட்டதில்லை
அவளது தந்தைக்கொரு சொந்தக்கடையிருந்தது
திருமணஞ்செய்வதே அவளது ஒரேயொரு விருப்பாயிருந்தது
அதைவிட வேறொன்றுமில்லை

நெலியா அவளது ஐரிஷ் தந்தையை அறிந்தவளில்லை
அடர்த்தியான கறுப்புக்கற்றைகள், மாதுளம்பழமான கன்னங்கள்
எல்லாப் பெடியங்களும் விரும்பக்கூடிய அழகானவளாயிருந்தாள்

லட்சுமி நானிதுவரை பார்த்திராத தடித்த கண்ணாடிகளை
அணிந்திருந்தாள்
அவளது வீடு, அடிப்படை வசதிகளற்றது
போத்தல் விளக்கிலிருந்து வரும் தெளிவற்ற கதிரே
அவளது ஒளியாகவிருந்தது

அவள் ஒரு வைத்தியராகவோ வழக்கறிஞராகவோ
என்றேனும் ஒருநாள் ஆவாளென
அவளது தந்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்
அல்லது ஆகக்குறைந்தது
பல்கலைக்கழகத்திற்குச் செல்வாளென

நான் ஒரு கணமும் இன்னொரு இனத்திற்குரியவளென
(இவர்களோடு) இருந்தபொழுதில் உணர்ந்ததில்லை
நாங்கள் இளமையாக இருந்தபோது வாழ்வு இனிமையாக இருந்தது
துவேஷம் தனது முகத்தைக்காட்டி பல்லிளித்ததும் இல்லை

இப்போது உரத்துக்கதைத்தபடி
எனது மகள் பாடசாலையிலிருந்து நடந்துவருகின்றாள்
ஐந்துபேராய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி
இன்றைய நாளின் விசயத்தை அலசுகின்றார்கள்

™ஒரு தமிழ் கடை இன்று எரிக்கப்பட்டது› ஒருத்தி சொன்னாள்.
™கொளுத்தியது சரிதான்› என்றாள் இன்னொருத்தி.
அவர்களுக்கு ஷாரினா, நெலியா லட்சுமியின் அருகாமை
ஒருபோதும் கிடைத்ததேயில்லை.

--
சிங்கள மூலம் : பிரேமினி அமீரசிங்க
(From the collection, Kaleiooscope)
(தமிழில் மொழிபெயர்த்தவர் விபரம் கிடைக்கவில்லை)